

சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சியாளர்களுக்கான

# கைநூல்

# சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சியாளர்களுக்கான கைநூல்

2017

முதல் பதிப்பு: 2015 திசெம்பர்
இரண்டாம் பதிப்பு: 2017 திசெம்பர்

ஓவியம்

ஹிங்குல்வல திசாநாயக்க

ISBN: 978-955-575-329-6

அச்சிடல்:
இலங்கை மத்திய வங்கியின் அச்சகம்
58 சிறி ஜெயவர்த்தனபுர மாவத்தை
இராஜகிரிய

பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
சனாதிபதி மாவத்தை
கொழும்பு 1

தொலைபேசி இலக்கம்: 011-247 7437/247 7448

# இந்நூலைப் பற்றி....

நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகள் இன்றியமையாததாகும். இவ்வாறான தொழில்முயற்சிகள் நாடு முழுவதிலும் பரந்து காணப்படுகின்றமையால் இவற்றின் ஊடாக நாட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் செல்வம் பகிர்ந்து செல்கின்றது. நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் உள்ள மக்களுக்கு தொழில்வாய்ப்புகள் உருவாக்கிக் கொடுக்கப்படுகின்றது. எமது நாட்டின் தேசிய உற்பத்திக்கும், ஏற்றுமதிகளுக்கும் சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகளின் மூலம் அளப்பரிய சேவை ஆற்றப்படுகின்றது. பாரிய அளவிலான தொழில்முயற்சிகள் கூட சிறிய மற்றும் நடுத்தரளவிலான உற்பத்தி நிறுவனங்களின் உற்பத்திகள் மற்றும் பணிகளில் தங்கியிருக்கின்றன.

இது எமது நாட்டுக்கு மாத்திரம் மட்டுப்பட்டதொரு விடயமல்ல. உலகின் அபிவிருத்தியடைந்த நாடுகளில் கூட சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகளுக்கு பெருமளவு முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. நடைமுறையிலுள்ள தொழில்முயற்சிகளுக்கு உதவுவதற்கு, அந்த தொழில்முயற்சிகள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளுக்கு தீர்வுகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு, புதிதாக மென்மேலும் இது போன்ற தொழில்முயற்சிகளை உருவாக்குவதற்காக கைகொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

எமது நாட்டில் சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகளுக்கு கைகொடுப்பதற்கும் அவ்வாறான முறைகள் பெருமளவில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அவை பற்றிய விபரங்கள் கூட புத்தகங்கள் மூலமும், வானொலி - தொலைக்காட்சி போன்ற ஊடகங்களின் மூலமும் பிரசாரம் செய்யப்படுகின்றன. எனினும், அதைப் பற்றிய போதியளவு அறிவு எம்மில் பெரும்பாலானோர்களுக்கு கிடைத்துள்ளதெனக் கூற முடியாது.

ஆதலால், உங்கள் கைகளுக்கு கிடைத்துள்ள இந்நூல் அவ்வாறான தகவல்களை மீண்டுமொருமுறை உங்களுக்கு கூறுகின்றதாக நீங்கள் கருதலாம். அவ்வாறு நீங்கள் நினைப்பதில் எவ்விதத் தவறும் இல்லை. ஆயினும் இந்தக் கைநூலின் மூலம் அந்த விடயங்களை மிகவும் எளிமையான விதத்தில், பாமரர்களாலும் புரிந்துகொள்ளக் கூடிய மொழி நடையில் முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதேபோன்று, அது பற்றிய விபரங்கள் வினா, விடை வடிவத்திலும் முன்வைக்கப்படுகின்றது. இதன் மூலம் தேவைப்படுகின்ற அனைத்து அடிப்படை விடயங்களும் எளிமையாகவும் மிகச் சுருக்கமாகவும் முன்வைக்கப்படுகின்றது. ஆதலால், இந்நூலைப் பரிசீலித்தலானது சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு சிரமமாகவும் அலுப்பாகவும் இருக்காது.

# உள்ளடக்கம்


இந்நூலைப் பற்றி ...... iii

1. அடிப்படைக் கருத்துகள் 1
2. தொழில்முயற்சியாளர் ஒருவரால் ஆராயப்பட வேண்டிய அடிப்படை விடயங்கள் 5
3. கணக்குகளைப் பேணிவருதல் 15
4. சந்தைப்படுத்தல் பற்றிய பிரச்சினைகள் 33
5. ஒரு தொழில்முயற்சியைப் பேணிவருதல் தொடர்பில் நிறைவு செய்யப்பட வேண்டிய தேவைகள் 37
6. வியாபார மதியுரை நிறுவனங்கள் 55
7. வங்கிக் கடன் 69



# அடிப்படைக் கருத்துக்கள்

**சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகள் என்பவை யாவை?**

ஒரு தொழில் சிறு அளவிலானதா, நடுத்தரளவிலானதா அல்லது பாரிய அளவிலானதா என்பது பல விடயங்களை ஆராய்ந்தே தீர்மானிக்கப்படுகின்றது. அந்த விடயங்கள் எவையெனில்,



i. தொழில்முயற்சிக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள மூலதன நிதித் தொகை

ii. தொழில்முயற்சியின் வருடாந்த உற்பத்தியின் நிதிசார் பெறுமதி

iii. தொழில்முயற்சிக்கு உரிய சொத்துக்களின் நிதிசார் பெறுமதி

iv. தொழில்முயற்சியில் பணியாற்றுகின்ற ஊழியர்களின் எண்ணிக்கை

## தொழில்முயற்சி என்பது யாது?

நாம் ஏதேனுமொரு தொழிலை ஆரம்பிப்பது பிரதிபலன் பெறுகின்ற நோக்கத்துடனாகும். அதற்கு நாம் ஏதேனுமொரு விதத்தில் முதலீடு செய்தல் வேண்டும். அதற்காக அர்ப்பணிப்புகளைச் செய்வதற்கு, இடர்களை ஏற்பதற்கு தயாராயிருத்தல், அதேபோன்று அதற்கானதொரு விருப்பமும் எம்மிடம் காணப்படுதல் வேண்டும். அதேபோன்று அந்த வேலையை தொடர்ந்து செய்து வருவதற்கான ஆற்றலும் தேவைப்பாடும் எம்மிடம் காணப்படுதல் வேண்டும். இவ்வாறு ஒரு தொழிலை ஆரம்பித்து, சிறந்த முறையில் முகாமைத்துவம் செய்து பேணிவருவதற்கு ஒருவரிடம் காணப்படும் ஆற்றலையும் விருப்பத்தையும் தொழில்முயற்சியெனக் கூறுகிறோம்.

## அவ்வாறென்றால் தொழில்முயற்சியாளர் என்பவர்?

மேலே கூறப்பட்டுள்ளவாறு தொழில்முயற்சியொன்றை ஆரம்பித்து, சிறந்த முறையில் முகாமைத்துவம் செய்வதற்கு முடியுமான, அதேபோன்று அதற்கானதொரு விருப்பத்தையும் கொண்டுள்ளவர்களை தொழில்முயற்சியாளர் எனக் கூறகிறோம்.

## வெற்றிகரமான தொழில்முயற்சியாளரை இனங்காண்பது எவ்வாறு?



- வெற்றிகரமான தொழில்முயற்சியாளர் என்பவர் ஆரம்பித்த தொழிலை மிகச் சிறந்த முறையிலும், அதேபோன்று புதிய கருத்துக்களின் அடிப்படையிலும் முன்னெடுத்துச் செல்வதற்கான விருப்பத்தையும் ஆற்றலையும் கொண்டுள்ள ஒருவராவார்.
- ஒரு தொழிலின் நோக்கத்தை ஓர் இரவில் நிறைவுசெய்துகொள்ள முடியாது. பல்வேறு தடைகள், சவால்களை எதிர்கொள்ள வேண்டி நேரிடுகின்றது. எனவே வெற்றிகரமான ஒரு தொழில்முயற்சியாளர் என்பவர், தாம் ஆரம்பித்த தொழிலை பல்வேறான தடைகள் மற்றும் சவால்களுக்கு மத்தியில் நீண்ட காலம் முன்னெடுத்துச் செல்வதற்கான திடசங்கற்பத்தையும் அர்ப்பணிப்பையும் கொண்டுள்ள ஒருவராவார்.
- அதேபோன்று, வெற்றிகரமான தொழில்முயற்சியாளர் என்பவர், தம்மிடம் இருக்கின்ற தம்மால் பயன்படுத்த முடியுமாயுள்ள வளங்களிலிருந்து உச்சமட்ட, பல்வேறான பயன்களை பெற்றுக்கொள்ளும் ஆற்றலைக் கொண்டுள்ள ஒருவ்ராவார்.

- வெற்றிகரமான தொழில்முயற்சியாளர் என்பவர் மற்றையவர்களின் கருத்துக்களுக்கு செவிமடுத்து, தொழிலிலுள்ள குறைபாடுகளுக்கு தீர்வு வழங்குவதற்கான விருப்பத்தைக் கொண்டுள்ள ஒருவராவார்.
- அது மட்டுமல்ல, வெற்றிகரமான தொழில்முயற்சியாளர் என்பவர் எப்போதும் புதிதாக ஏதேனுமொன்றை கற்பதற்கான விருப்பத்தைக் கொண்டுள்ள ஒருவராவார்.

**இடர்நேர்வுகளின்றி ஒரு தொழில்முயற்சியை முன்னெடுத்துச் செல்ல முடியாதா?**

நாம் ஒரு தொழிலைச் செய்வது பிரதிபலன்களைப் பெற்றுக்கொள்வதற்காக. தொழில்முயற்சியாளர் என்பவர் பிரதிபலன்களுக்காக இடர்நேர்வை எதிர்கொள்வதற்குத் தயாராயுள்ள ஒருவராவார். இடர்நேர்வை எதிர்கொள்ளாது வெறுமனே இருப்பதற்கு தீர்மானிப்பதாயின் பிரதிபலன் எதுவும் கிடைக்காது. எனவே பிரதிபலன்களைப் பெற முடியுமாயிருப்பது இடர்நேர்வுகளை எதிர்கொள்வதன் மூலமாகும். அதிகளவு பிரதிபலன்களைப் பெறவேண்டுமெனில் அதிகளவில் இடர்நேர்வுகளை எதிர்கொள்வதற்குத் தயாராயிருத்தல் வேண்டும். எனினும், தொழிலுக்குரிய அடிப்படை விடயங்களைச் சிறந்த முறையில் புரிந்துகொண்டு செயலாற்றுவதாயிருப்பின், எந்தவொரு இடர்நேர்வையும் வெற்றிகரமாக எதிர்கொண்டு அதிக பிரதிபலன்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.



# தொழில்முயற்சியாளர் ஒருவரால் ஆராயப்பட வேண்டிய அடிப்படை விடயங்கள்

**ஒரு தொழிலை ஆரம்பிக்கின்றபோது ஆராயப்பட வேண்டிய விடயங்கள் என்ன?**

ஒரு தொழில்முயற்சியை ஆரம்பிக்கின்றபோது ஆராயப்பட வேண்டிய பல விடயங்களுள்ளன. முக்கியமான அடிப்படை விடயம், எதனை உற்பத்தி செய்வது என்பதைத் தீர்மானித்தலாகும்.

**எதனை உற்பத்தி செய்வது என்பதை எவ்வாறு தீர்மானிப்பது?**

நாம் ஒரு தொழில்முயற்சியை ஏதாவது ஒரு பண்டத்தை அல்லது சேவையை உற்பத்தி செய்வதற்காகவே ஆரம்பிக்கிறோம். தற்போது சந்தையிலுள்ள ஒரு பண்டத்தை அல்லது சேவையை எம்மால் உற்பத்தி செய்ய முடியும். அவ்வாறின்றேல், புதிதாக ஒரு பண்டத்தை அல்லது சேவையை உற்பத்தி செய்ய முடியும். நாம் பெரும்பாலான நேரங்களில் சந்தையில் ஏற்கனவேயிருக்கும் பண்டம் அல்லது சேவையையே உற்பத்தி செய்கிறோகும்.

**ஒரு சேவையை உற்பத்தி செய்தல் என்பதன் அர்த்தம் என்ன?**

ஒரு பண்டத்தை செய்தல் என்பதை நாம் அனைவரும் அறிவோம். ஒருவர் தலைமுடி அலங்கரிப்புக்கான ஒரு சலூனை ஆரம்பிப்பதாக நாம் கருதுவோம். அப்போது அவர் ஒரு சேவையையே வழங்குகிறார். அவர் எந்தவொரு பண்டத்தையும் உற்பத்தி செய்வதில்லை. எனவே இவ்வாறு ஒரு தொழிலாகச் சேவையை வழங்குவதனை, நாம் சேவையை உற்பத்தி செய்தல் எனக் கூறுகிறோம்.

**நல்லது நாம் சந்தையில் ஏற்கனவேயிருக்கும் ஒரு பண்டத்தை அல்லது சேவையை உற்பத்தி செய்வதற்குத் தீர்மானிப்போமெனில்?**

அவ்வாறு எம்மால் திடீரெனத் தீர்மானிக்க முடியாது. அவ்வாறு தீர்மானிப்பதற்கு முன்னர் ஆராயப்பட வேண்டிய பல விடயங்களுள்ளன.

அந்த விடயங்கள் என்ன?

முக்கியமாக ஏற்கனவே சந்தையில் காணப்படுகின்ற அந்தப் பண்டம் அல்லது சேவை பற்றி அறிந்திருத்தல் வேண்டும். அந்தப் பண்டத்தின்/ சேவையின் தரத்தைப் பற்றி அறிதல் வேண்டும். அந்தப் பண்டத்தின்/ சேவையின் குறைபாடுகள், மேம்படுத்த வேண்டிய அம்சங்கள் எவை என்பதைப் பற்றி இனங்காணல் வேண்டும். பின்னர் அதற்குப் பதிலாக தாம் உற்பத்தி செய்கின்ற பண்டத்தின்/ சேவையின் தரத்தைப் பற்றி தீர்மானித்தல் வேண்டும். அவ்வாறின்றேல் தாம் உற்பத்தி செய்கின்ற பண்டத்திற்கு/ சேவைக்கு சந்தையிலுள்ள நுகர்வோரை ஊக்குவிக்க முடியாது.





நுகர்வோர் யார் என்பதையும் இனங்காண வேண்டுமா?

ஆம். நாம் ஒரு உற்பத்தி செய்வது நுகர்வோருக்காகவே. எனவே உற்பத்தி நடவடிக்கையை ஆரம்பிக்க முன்னர் எம்மிடையே நுகர்வோரைப் பற்றிய அறிவும் புரிந்துணர்வும் காணப்படுதல் வேண்டும். சந்தையில் பல்வேறு மட்டங்களிலான நுகர்வோர் காணப்படுகின்றனர். உயர் வருமானத்தைப் பெறுகின்றவர்கள் காணப்படுவர். இடைமட்ட வருமானத்தைப்

பெறுகின்றவர்கள், கீழ்மட்ட வருமானத்தைப் பெறுகின்றவர்கள் காணப்படுவர். அது மட்டுமல்ல. கல்விமட்டத்தைப் பொறுத்தும் நுகர்வோரை வகைப்படுத்த முடியும்.

**உயர்மட்டக் கல்வியைப் பெற்றவர்கள் மற்றும் அத்தகைய கல்வியறிவைப் பெறாதவர்கள் என்று கூறலாமா?**

ஆம். அதேபோன்று எவ்விதக் கல்வியும் பெறாதவர்களும் காணப்படலாம். அது மட்டுமல்ல. வயது மட்டத்தைப் பொறுத்தும் நுகர்வோர் மாற்றமடைவார்கள். சிறுவர், இளைஞர், வயோதிபர் என்றவாறும் நுகர்வோரை வகைப்படுத்தலாம். ஆண் - பெண் என்றவாறும் நுகர்வோரை இனங்காண முடியும்.

**அவ்வாறென்றால் வெளிநாட்டு நுகர்வோர்?**

அதுவும் உண்மைதான். நாம் வெளிநாட்டுச் சந்தையைப் பற்றி சிந்திப்பதாயிருந்தால் அந்தந்த நாடுகளின் நுகர்வோரைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். எனவே, ஒரு பண்டத்தை/ சேவையை உற்பத்தி செய்வதற்குத் தீர்மானிக்கின்றபோது அதனை

யாருக்காக உற்பத்தி செய்வது என்பதை சரிவர இனங்காணுதல் மிக முக்கியமாகும். அது மட்டுமல்ல. அந்தந்த நுகர்வோரின் விருப்பு வெறுப்புகள், நுகர்வு முறை போன்ற விடயங்களைப் பற்றிய அறிவையும் புரிந்துணர்வையும் பெற்றிருத்தல் வேண்டும்.

**எதனை உற்பத்தி செய்வது, யாருக்காக உற்பத்தி செய்வது என்பதைத் தீர்மானித்ததன் பின்னர்?**



அடுத்து ஆராயப்பட வேண்டிய மிக முக்கியமான விடயம்தான் உற்பத்தி செய்கின்ற முறை. எந்த முறையில், எந்தத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி உற்பத்தி செய்தல் வேண்டும் என்பதைத் தீர்மானித்தல் வேண்டும். சில பொருட்களை உற்பத்தி செய்ய அவ்வளவு இயந்திர சாதனங்கள் தேவைப்படாது. உழைப்பின் மூலம் மாத்திரம் செய்ய முடியும். ஆனால் சில பண்டங்களை உற்பத்தி செய்ய இயந்திர சாதனங்கள் தேவைப்படுகின்றன. சில நேரம் இயந்திர சாதனங்களுடன் உழைப்பையும் கூட்டாகப் பயன்படுத்தலாம். எதனை உற்பத்தி செய்வது யாருக்காக உற்பத்தி செய்வது என்ற விடயத்தின் மீது இதனை தீர்மானிக்க வேண்டி வரும்.

**எவ்வளவு உற்பத்தி செய்யப்படுதல் வேண்டும் என்பதும் முக்கியமா?**

ஆம். சந்தையைப் பொறுத்து அதனைத் தீர்மானிக்கலாம். மேலே கூறப்பட்ட உற்பத்தி செய்கின்ற முறை கூட எவ்வளவு உற்பத்தி செய்கிறோம் என்பதுடன் தொடர்புடையதாகும். பெரியதொரு சந்தைக்கு அதிகளவில் உற்பத்தி செய்கின்ற அளவுக்கு செலவைக் குறைத்துக்கொண்டு இலாபத்தை அதிகரிக்கச் செய்ய முடியும். சிறியதொரு சந்தைக்குப் பாரியளவில் உற்பத்தி செய்தல் அர்த்தமற்றதாகும். எவ்வாறாயினும் சந்தையை இனங்காணும் வரை சிறியளவில் உற்பத்தி செய்தல் நல்லது. எதனை, எவ்வளவு, எவ்வாறு உற்பத்தி செய்வது என்பது சந்தையின் அளவு மற்றும் இயல்பின் மீதே தீர்மானிக்கப்படும்.

**அவ்வாறென்றால் விலை? உற்பத்தி செய்கின்ற பண்டத்தின் விலையை தீர்மானிப்பது எவ்வாறு?**

இது மிக முக்கியமானதொரு விடயம். விலையை தீர்மானிக்கின்றபோது உற்பத்தி ஆரம்பிக்கப்பட்ட இடத்திலிருந்து உற்பத்தியைச் சந்தைக்கு எடுத்துச் செல்லும்வரை செய்யப்பட்ட அனைத்து செலவும் கவனத்திற் கொள்ளப்படுதல் வேண்டும்.

விபரமாகக் கூறுவதாயின்..?

மூலப்பொருளுக்காக செய்யப்பட்ட செலவு, ஊழியர்களுக்கு செலுத்தப்பட்ட சம்பளம், நீர், மின்சார, தொலைபேசிக் கட்டணம், வாடகை செலுத்துதல், வரி செலுத்துதல், விநியோகச் செலவு, வர்த்தக விளம்பரங்களுக்கு செய்யப்பட்ட செலவுகள், தரச் சான்றிதழ் போன்றவற்றை பெறுவதற்காக செய்யப்பட்ட செலவுகள் முக்கியமானவையாகும். இதற்கு மேலதிகமாக, எதிர்பார்க்கின்ற இலாபமும் விலையில் சேர்த்துக்கொள்ளப்படுதல் வேண்டும்.



அவ்வாறென்றால் விற்பனை செய்ய முடியாமல் எஞ்சுகின்ற பண்டங்களின் பெறுமதி?

ஆம். இந்த அனைத்து விடயங்களும் நன்றாக ஆராயப்படல் வேண்டும். அவ்வாறின்றேல் பெரியதொரு நட்டம் ஏற்பட்டு தொழிலை முன்னெடுத்துச் செல்ல முடியாமற் போகலாம். அதாவது தொழில் வங்குரோத்தடையலாம். ஒரு தொழில்முயற்சி

வங்குரோத்து நிலைக்குள்ளாதல் எனக் கூறுவது இதனையே.


இவ்வாறு எல்லாச் செலவுகளையும் உள்ளடக்கி, இலாபத்தைப் பற்றியும் சிந்தித்து விலையை தீர்மானித்தல் அவ்வளவு கஷ்டமான விடயம் அல்லவே!



அவ்வாறு சொல்ல முடியாது. சந்தையிலுள்ள ஒரு பண்டத்தை நாம் உற்பத்தி செய்கின்றபோது மற்றையவர்கள் நிர்ணயித்துள்ள விலையைப் பற்றியும் சிந்திக்க வேண்டிவரும். நாம் நினைக்கின்ற விதத்திலெல்லாம் அதிக விலையை தீர்மானிக்க முடியாது. நாம் தீர்மானிக்கின்ற விலை போட்டி ரீதியிலானதாதல் வேண்டும். நுகர்வோர் எப்போதுமே குறைந்த விலையில் பொருட்களை வாங்கவே விரும்புவார்கள். நாம் கூட அவ்வாறல்லவா. எனவே நாம் சந்தையில் ஏனைய உற்பத்தியாளர்களுடன் போட்டி போடக் கூடியதாயிருத்தல் வேண்டும்.

நாம் ஒரு உற்பத்தியைச் செய்கின்றபோது எவ்வளவு விடயங்களுக்கு செலவு செய்கிறோம்? இந்த அனைத்து விடயங்களையும் நினைவில் வைத்திருப்பது எவ்வாறு?

அவ்வாறு எல்லா விடயங்களையும் நினைவில் வைத்திருக்க முடியாது. நினைவில் வைத்திருக்க வேண்டிய அவசியமுமில்லை. தொழிலுடன் தொடர்புடைய அனைத்து கொடுக்கல்வாங்கல்களுடனும், செலவுகளுடனும் தொடர்புடைய கணக்குகளைக் குறித்துக்கொள்வதன் மூலம் அந்த வேலையை செய்ய முடியும். இந்த கணக்குகளைக் குறித்துக்கொள்ளல் நாளாந்தம் நடைபெறுதல் வேண்டும். இதனை கணக்குப் பதிவு எனக் கூறுகிறோம். சிறியதொரு தொழில்முயற்சியாக



இருப்பின் அந்த வேலையை - அதாவது கணக்குப் பதிவை தம்மாலேயே செய்ய முடியும்.

நடுத்தரளவிலானதொரு தொழில்முயற்சியாக இருப்பின் கணக்குப் பதிவு தொடர்பில் விசேட அறிவைக் கொண்ட ஒருவரின் சேவையைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**இது ஒரு பெரிய சிக்கலாக அமையாதா? செலவு என்றால் எவ்வளவு இருக்கும்!**

அது ஒரு முறைசார்ந்த விதத்திலேயே செய்யப்படும். அதற்காக பல்வேறு கணக்குகளைத் தயாரித்தல் வேண்டும். அது ஒழுங்கான விதத்தில் செய்யப்படும் ஒரு வேலையாகும். அதனைப் புரிந்துகொண்டால் இது அவ்வளவு கஷ்டமானதொரு வேலையல்ல.

# கணக்குகளைப் பேணிவருதல்



தொழிலின் கணக்குக் குறிப்புக்களை கணக்குகளிலேயே வைத்திருக்க வேண்டுமா?

ஆம்.

கணக்குகளை தயாரித்தல் மிகவும் கஷ்டமான ஒரு வேலையல்லவா...

அவ்வாறல்ல. அடிப்படை விடயங்களைப் புரிந்துகொண்டால் அது அவ்வளவு கஷ்டமான வேலையல்ல.

**கணக்குகள் அதிகளவில் இருப்பதாகக் கூறப்படுகின்றதல்லவா...**



பிரதானமாக இரண்டு கணக்குகள்தான் இருக்கின்றன. ஏனைய அனைத்து கணக்குகளும் அந்தக் கணக்குகளுக்கு ஏற்புடையதாகவே தயாரிக்கப்படுகின்றன.

**கணக்கு வகைகள் இரண்டு...!**

ஆம். ஒன்று வியாபார, இலாப நட்டக் கணக்கு. மற்றையது ஐந்தொகைக் கணக்கு.

**இந்த வியாபார, இலாப நட்டக் கணக்கின் மூலம் என்ன செய்யப்படுகின்றது?**

இதனைச் செய்வது, தொழிலின் அனைத்து செயற்பாடுகளிலிருந்தும் கிடைக்கின்ற வருமதியையும் தொழிலுக்காகச் செய்யப்படுகின்ற அனைத்துச் செலவுகளையும் உள்ளடக்கியதாக அந்தக் கணக்குத் தயாரிக்கப்படுகின்றது. அதன் மூலம்தான் தொழிலின் வருமானமும் செலவும் காட்டப்படும். வருமானத்திற்கும் செலவுக்கும் இடையிலுள்ள மாற்றத்தின் மூலம்தான் தொழிலின் இலாபம் அல்லது நட்டம் எவ்வளவு என்பதை பார்க்க முடியும்.

வியாபாரத்திலிருந்து கிடைக்கின்ற வருமானத்தைப் பற்றி இலகுவாகவே அறிந்துகொள்ள முடியும்.



ஆம். எளிமையாகக் கூறுவதென்றால் தம்மிடமுள்ள பண்டங்களின் தொகையை விற்புனை செய்வதன் மூலம் கிடைக்கின்ற வருமானத்திலிருந்து பண்டங்கள் தொகைக்காக செலவு செய்யப்பட்ட செலவையும் எஞ்சியுள்ள பண்டங்கள் தொகையின் பெறுமதியையும் கழிக்கின்றபோது கிடைக்கின்ற தொகையை வியாபாரத்தின் வருமானம் எனக் கூறமுடியும். எனினும் அதனை நாம் தொழிலின் மொத்த இலாபம் எனக் கூறுகிறோம்.

அதாவது விற்பனையின் மூலம் கிடைத்த வருமானத்திலிருந்து விற்கப்பட்ட பண்டங்களின் கொள்வனவு விலையைக் கழித்தல் வேண்டும்?

ஆம். கையிருப்பிலிருந்த தொகையின் விலையிலிருந்து எஞ்சியுள்ள தொகையின் விலையைக் கழிக்கின்றபோது விற்பனை செய்யப்பட்ட தொகைக்காக செய்யப்பட்ட செலவைக் கண்டறிய முடியும். பண்டங்கள் விற்பனை செய்யப்பட்டதன் மூலம் கிடைத்த வருமானத்தை நாம் அறிவோம். இந்த வருமானத்திற்கும் விற்பனை செய்யப்பட்ட தொகைக்காகச் செய்யப்பட்ட செலவுக்கும் இடையிலுள்ள மாற்றத்தை மொத்த இலாபம் எனக் கூறுகிறோம்.

ஆனால் அவை அதிசயமானதொரு முறையிலல்லவா பதிவு செய்யப்படுகின்றன. வரவு என்கிறோம், பற்று என்கிறோம்...

வியாபார, இலாப நட்டக் கணக்கு என்பது ஒரு இறுதிக் கணக்காகும். அவ்வாறானதொன்றில் வரவு பற்று எழுத வேண்டியதில்லை. தொழிலின் வருமானத்தையும் செலவுகளையும் இரண்டு நிரல்களில் எழுதுவதை மாத்திரமே செய்தல் வேண்டும். செலவுகளை முதலாவது நிரலில் எழுதுவோம். வருமானத்தை இறுதி நிரலில் எழுதுவோம்.

உதாரணத்தின் மூலம் விளக்க முடியுமா?

முடியும். ஆனால் வியாபார, இலாப நட்டக் கணக்குத் தயாரிக்கப்படுவது மொத்த இலாபத்தை கண்டறிவதற்காக மட்டுமல்ல. அதன் மூலம் தொழிலின் தேறிய இலாபத்தையும் தயாரித்துக் காட்டமுடியும்.

தேறிய இலாபத்தை கண்டறிவது எப்படி?

முன்னர் கூறியவாறு கண்டறியப்பட்ட மொத்த இலாபத்திலிருந்து வியாபாரத்திற்காக செய்யப்பட்ட ஏனைய செலவுகளைக் கழிக்கின்ற போது தான் தேறிய இலாபம் கிடைக்கும்.



ஏனைய செலவுகள் என்பது?

பண்டங்கள் தொகையொன்றை வாங்கி அல்லது தயாரித்து விற்பனை செய்கின்றபோது மேலும் பல செலவுகளைச் செய்ய வேண்டி நேரிடும். விநியோகச் செலவு இருக்கும். ஊழியர்களுக்கு சம்பளம் செலுத்த வேண்டிவரும். நீர்க் கட்டணம், மின்சாரக் கட்டணம் செலுத்த வேண்டிவரும். வங்கிக்கு வட்டி செலுத்த வேண்டிவரும். வாடகை செலுத்த வேண்டிவரும். வாகனப் பதிவுக் கட்டணம், வாகனத் திருத்தச் செலவுகள், இவ்வாறு பல செலவுகள் காணப்படும்.

அந்த செலவுகளைக் கூட்டி மொத்த இலாபத்திலிருந்து கழித்தல் வேண்டுமா?

ஆம். அவ்வாறு செய்தால்தான் தேறிய இலாபத்தை கண்டறிய முடியும்.

உதாரணத்தின் மூலம் காட்டினால் விளங்கிக் கொள்ள முடியுமாயிருக்கும்.

நாம் இவ்வாறு நினைப்போம். திரு. சுனிமல் என்பவர் 2015 மாச்சு மாதம் 01 ஆம் திகதி வங்கியிலிருந்து ரூபா 120,000 கடனாகப் பெற்று ஐஸ்கிரீம் மொத்த விலையில் கொள்வனவு

செய்து சில்லறையாக விற்பனை செய்கின்ற ஒரு தொழிலை ஆரம்பிக்கின்றார். அந்தக் கடனை இரண்டு ஆண்டுகளில் செலுத்த வேண்டும். தொழிலை ஆரம்பிப்பதற்குத் தமது சேமிப்புக் கணக்கில் இருந்த ரூபா 70,000 தொகையையும் பயன்படுத்துகிறார்.


**இவ்வாறானதொரு தொழிலுக்கு குளிர்சாதனப் பெட்டியொன்றும் வாங்கவேண்டி வருமே ...**



ஆம். அவர் ரூபா 65,000 செலவழித்து அதிகுளிர்சாதனப் பெட்டியொன்றையும் வாங்குகிறார். அதனை வைப்பதற்கும், வியாபாரத்துடன் தொடர்புடைய மற்றைய பொருட்களை வைப்பதற்கும் வீட்டில் அறையொன்றை தயார் செய்துகொள்கிறார். அந்த வேலைக்கு ரூபா 10,000 செலவாகின்றது. ஐஸ்கிரீம் விற்பனை செய்வதற்குச் செல்வதற்காக பயன்படுத்திய மோட்டார் சைக்கிள் ஒன்றை ரூபா 90,000 க்கு கொள்வனவு செய்கிறார்.

**அவை வியாபாரத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட நிலையான பொருட்கள் அல்லவா**

அவ்வாறானவற்றுக்கு தொழில்முயற்சியின் சொத்துக்கள் எனக் கூறுகிறோம். அவற்றை தொழில்முயற்சியின் வியாபார, இலாப




நட்டக் கணக்கில் சேர்ப்பதில்லை. அவற்றை ஐந்தொகையிலேயே பதிவு செய்கிறோம். வியாபார, இலாப நட்டக் கணக்கில் அந்தந்த மாதத்தினுள் வியாபாரத்திற்காக செய்யப்பட்ட செலவுகளே பதிவு செய்யப்படும்.

அதாவது ஒரு மாதத்தினுள் ஏற்படுகின்ற செலவுகள் - வருமானத்தைக் கொண்டுதான் வியாபார, இலாப நட்டக் கணக்கு தயாரிக்கப்படும். கணக்குகளின் தகவல்களை சேர்த்து செய்கின்ற கணக்குகளுக்கு கூறுவது வியாபாரத்தின் ஐந்தொகை என்று.

மேலே கூறியவற்றை உதாரணத்தின் மூலம் விளக்குவதாயின் ...

நாம் இவ்வாறான கொடுக்கல்வாங்கல் சிலவற்றை உதாரணத்திற்காக எடுப்போம்.

| | |
|---|---|
| ஐஸ்கிரீம் மொத்தமாக கொள்வனவு செய்வதற்கு (காசுக்கு) | = ரூ.40,000.00 |
| ஐஸ்கிரீம் விற்பனையின் மூலம் பெறப்பட்ட வருமானம் | = ரூ.60,000.00 |
| மாத இறுதியில் எஞ்சிய ஐஸ்கிரீமின் பெறுமதி | = ரூ. 1,000.00 |
| மோட்டார் சைக்கிளைப் பதிவு செய்வதற்கு | = ரூ. 450.00 |
| மோட்டார் சைக்கிள் திருத்தத்திற்கு | = ரூ. 800.00 |
| பெற்றோலுக்கான செலவு | = ரூ. 1,800.00 |
| மின் கட்டணம் | = ரூ. 1,800.00 |
| நீர் கட்டணம் | = ரூ. 200.00 |
| வங்கிக் கடன் தவணை (120,000/ 24 மாதங்கள்) | = ரூ. 5,000.00 |
| வங்கி வட்டி - மாதத்திற்கு | = ரூ. 1,000.00 |
| பன்சாலைக்கு உதவியளித்தல் | = ரூ. 200.00 |
| வீட்டுத் தேவைகளுக்காக பெறப்பட்டது | = ரூ. 2,000.00 |
| கையில் மீதியுள்ள பணம் | = ரூ.31,750.00 |



இப்போது எமக்கு இந்தக் கொடுக்கல்வாங்கலை வியாபார இலாப நட்டக் கணக்கில் பதிவு செய்ய முடியும்.

அதனையும் செய்துகாட்டுங்கள் ........

நாம் இவ்வாறு எழுதுவோம்.

திரு. சுனிமலின் வியாபார/ தொழிலின் வியாபார, இலாப நட்டக் கணக்கு

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| ஐஸ்கிரீம் விற்பனை | | 60,000.00 |
| ஐஸ்கிரீம் கொள்வனவு | 40,000.00 | |
| கழிக்குக: | | |
| மாத இறுதியில் எஞ்சிய தொகை | 1,000.00 | |
| விற்பனை செய்யப்பட்ட ஐஸ்கிரீம் தொகையின் கொள்வனவு விலை | | 39,000.00 |
| மொத்த இலாபம் | | 21,000.00 |
| கழிக்குக:<br>ஏனைய செலவுகள் | | |
| மோட்டார் சைக்கிள் பதிவுக் கட்டணம் | 450.00 | |
| மோட்டார் சைக்கிள் திருத்தத்திற்கு | 800.00 | |
| மோட்டார் சைக்கிளுக்கான பெற்றோல் | 1,800.00 | |
| மின் கட்டணம் | 1,200.00 | |
| நீர் கட்டணம் | 100.00 | |
| வங்கி வட்டி | 1,000.00 | |
| பன்சாலைக்கு வழங்கியது | 200.00 | |
| மொத்த ஏனைய செலவுகள் | | 5,550.00 |
| தேறிய இலாபம் | | 15,450.00 |

இங்கே பதிவு செய்யப்பட்ட செலவுகள் முன்னர் கூறியவற்றை விட மாற்றமாக உள்ளதே ......



மின் கட்டணத்திலும், நீர் கட்டணத்திலும் மாற்றம் காணப்படுகின்றது. திரு. சுனிமல் தமது வீட்டிலேயே தொழிலுக்குரிய ஐஸ்கிரீமை களஞ்சியப்படுத்தி வைத்திருப்பதால் முழுக் கட்டணத்தையும் தொழிலின் கணக்கில் போட முடியாது. மின்சாரக் கட்டணத்திலிருந்து ரூபா 1200 மாத்திரமே கணக்கில் இடப்பட்டுள்ளது. மீதி ரூபா 600 ஐ அவரது தனிப்பட்ட செலவாகக் கருதியுள்ளோம். நீர் கட்டணத்திலும் ரூபா 100 மாத்திரம்தான் கணக்கில் இடப்பட்டுள்ளது.

அவ்வாறென்றால் அவர் வீட்டுச் செலவுக்காக எடுத்த பணம்?

அது அவர் தொழிலுக்காக செய்த செலவு அல்லவே. மற்றைய விடயம், அந்தப் பணத்தை எடுக்காதிருந்தால் அதனை தேறிய இலாபத்தில் சேர்த்திருக்கலாம். தேறிய இலாபம் என்பது தொழிலுக்கு சேர்கின்ற ஒரு சொத்தாகும். எனவே அதனை எடுத்ததன் மூலம் சொத்துத்தான் குறைவடைந்துள்ளது. அதனால் அதனை ஐந்தொகையிலேயே பதிவு செய்தல் வேண்டும்.

மோட்டார் சைக்கிள் ஒவ்வொரு மாதமும் பதிவு செய்யப்படுவதில்லையே

அது உண்மை. அது முழு ஆண்டுக்குமே உரியதொரு செலவாகும். ஆனால் அது தொழில் சார்பில் செய்யப்பட்ட ஒரு செலவாகும். அதனை ஒரு மாதத்தில் இட்டாலும் ஒன்றுதான் 12 மாதங்களுக்கு பகிர்ந்து இட்டாலும் ஒன்றுதான். ஆனால், இந்த இடத்தில் இது இம்மாதத்தில் செய்யப்பட்ட ஒரு செலவு என்பதால் இந்த மாதத்தின் இலாப நட்டக் கணக்கில் இட்டுள்ளோம்.

அவ்வாறென்றால் வங்கித் தவணைத் தொகை?



அது திருப்பிச் செலுத்தி விடுதலை பெறவேண்டிய ஒரு பொறுப்பல்லவா. சொத்துக்கள், பொறுப்புக்கள் ஐந்தொகையிலேயே பதிவு செய்யப்படுதல் வேண்டும்.

அவ்வாறென்றால் வங்கி வட்டி?

அது குறித்த கடன் தொகை - அதாவது பொறுப்பைச் செலுத்தி முடிக்கும் வரை அதற்காக ஏற்க வேண்டிய ஒரு செலவுக்குச் சமமாகும். எனவே அதனை வியாபார, இலாப நட்டக் கணக்கிலேயே பதிவு செய்தல் வேண்டும்.

அவ்வாறென்றால் குளிர்சாதனப்பெட்டி, மோட்டார் சைக்கிள் என்பவை சொத்துக்கள்?

ஆம். அவை ஐந்தொகையிலேயே பதிவு செய்யப்படும். குளிர்சாதனப்பெட்டி, மோட்டார் சைக்கிள் மட்டுமல்ல. ஐந்தொகையில் பதிவு செய்யப்பட வேண்டிய சொத்துக்கள் மேலும் உள்ளன.



அவை எவை?

நிலையான கட்டிடத்திற்காக செய்யப்பட்ட முதலீடு, எஞ்சியுள்ள ஐஸ்கிரீம், கையில் மீதியுள்ள பணத்தொகை.

எஞ்சியுள்ள ஐஸ்கிரீம் தொகை ..... ?

ஆம். அது திரு. சுனிமலின் ஒரு சொத்தாகும். அது விரைவாக பணமாக்க முடியுமான ஒரு சொத்தாகும். குளிர்சாதனப்பெட்டி, மோட்டார் சைக்கிள் போன்றதொரு நிலையான சொத்தல்ல. இவ்வாறு விரைவாக பணமாக்கக் கூடிய சொத்துக்களை நாம் அதிக திரவத்தன்மையைக் கொண்ட சொத்துக்கள் எனக் கூறுகிறோம்.

அவ்வாறென்றால் திரு. சுனிமல் ஈடுபடுத்திய ரூபா 70,000 பணத் தொகை?

இது ஒரு பொறுப்பாகும்.

பொறுப்பு ...? அது அவருடைய ஒரு சொத்து இல்லையா?

இல்லை. அது ஒரு பொறுப்பாகும். சொத்து அல்ல. அது தான் திரு. சுனிமல் தொழிலில் ஈடுபடுத்திய மூலதனம். அது தொழில் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் திரு. சுனிமலிடம் காணப்பட்ட ஒரு சொத்தாகும். ஆனால் அது தொழிலின் சொத்து அல்ல. அவர் தம்மிடம் இருந்த ஒரு சொத்தை தொழிலில் இட்டுள்ளார். தொழிலைச் செய்வதன் மூலம் அந்தச் சொத்தை இழந்து விடுவதற்கு திரு. சுனிமலுக்கு முடியாது. அவர் அதனைப் பாதுகாத்தல் வேண்டும். ஆதலால், அது தொழிலின் ஒரு பொறுப்பாகும்.

தொழிலின் சொத்துக்கள் - பொறுப்புகளைப் பதிவு செய்கின்ற முறையையும் காட்ட முடியுமா?

முன்னர் கூறியவாறு தொழிலின் சொத்துக்கள் - பொறுப்புகள் ஐந்தொகையிலேயே பதிவு செய்யப்படும். மீதியைப் பற்றி கூற வேண்டியது

குறிப்பிட்டதொரு காலகட்டத்தின் இறுதியிலாகும். பொதுவாக ஆண்டின் இறுதியில். தேவையாயின் மாதத்தின் இறுதியிலும் கூற முடியும்.

இங்கு கூறப்பட்ட உதாரணத்தின் மூலம் ஒரு மாதத்தினுள் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல்வாங்கல்களைப் பற்றி அல்லவா கூறப்பட்டது ....

ஆம். ஆதலால் எமக்கு இந்த உதாரணத்திற்கு பொருத்தமான விதத்தில் குறித்த மாதத்தின் இறுதிக்கான ஐந்தொகையை தயாரித்துக் காட்டமுடியும். தொழிலை ஆரம்பித்தது 2015 மாச்சு 1 ஆம் திகதி. ஆதலால் எமக்கு 2015 மாச்சு 31 ஆம் திகதிக்கு ஐந்தொகையை எழுத முடியும்.



நாம் அதனை இவ்வாறு எழுதுவோம்.

திரு. சுனிமலின் தொழில் - 2015 மாச்சு 31 ஆம் திகதி உள்ளவாறு ஐந்தொகை

| பொறுப்புகள் - ரூபா | | சொத்துக்கள் - ரூபா | |
|---|---|---|---|
| உரிமையாளர் ஈடுபடுத்திய பணம் (மூலதனம்) | 70,000.00 | நிலையான சொத்துக்கள் கட்டடம் | 10,000.00 |
| மாதத்தினுள் பெற்ற தேறிய இலாபம் | 15,450.00 | குளிர்சாதனப்பெட்டி | 65,000.00 |
| மொத்தம் | 85,450.00 | மோட்டார் சைக்கிள் | 90,000.00 |
| கழிக்குக: | | | |
| பெறுதல் (தனிப்பட்ட செலவு) | 2,700.00 | எஞ்சியுள்ள ஐஸ்கிரீம் | 1,000.00 |
| மொத்தம் | 82,750.00 | கையில் மீதியுள்ள பணம் | 31,750.00 |
| கடன் தொகை | 120,000.00 | | |
| திருப்பிச் செலுத்தல் (கழிக்குக) | 5,000.00 | | |
| மீதிக் கடன் தொகை | 115,000.00 | | |
| மொத்தம் | 197,750.00 | | 197,750.00 |

**மூலதனத்துடன் தேறிய இலாபத்தை கூட்டுவது ஏன்? மூலதனம் என்பது தொழிலின் ஒரு பொறுப்பாகும். தேறிய இலாபம் ஈட்டப்பட்டதன் காரணமாக அந்தப் பொறுப்புக் குறைவடையுமல்லவா...**

மூலதனம் என்பது தொழிலின் உரிமையாளருக்கு திருப்பிச் செலுத்த வேண்டிய தொகையாகும். தேறிய இலாபமும் அவ்வாறுதான். அதனை தொழில்முயற்சியின் உரிமையாளர் பெற்றுக்கொள்ளாது தொழில்முயற்சியிலேயே ஈடுபடுத்துவாராயின் தொழில்முயற்சியின் பொறுப்பு மேலும் அதிகரிக்கும். எனவே மூலதனத்துடன் தேறிய இலாபத்தை கூட்டுதல் வேண்டும்.

**வீட்டுத் தேவைக்காக பெற்றதாகக் கூறியது இரண்டாயிரம் ரூபா அல்லவா?**

ஆம். எனினும் நாம் மின் கட்டணத்திலிருந்து அறுநூறு ரூபாவும், நீர் கட்டணத்திலிருந்து நூறு ரூபாவும் வீட்டுச் செலவாகக் கருதினோம். அந்தச் செலவை வியாபார, இலாப நட்டக் கணக்கில் சேர்க்கவில்லை. எனவே அந்த 700 ரூபாவும் வீட்டுத் தேவைக்காக பெற்ற பணத்தில் சேர்க்கப்படுதல் வேண்டும். அப்போது தனிப்பட்ட செலவு ரூபா 2,700 ஆகும். அந்தத் தொகை அவர் தொழில்முயற்சியில் ஈடுபடுத்தியிருந்த பணத் தொகையிலிருந்து - அதாவது மூலதனத்திலிருந்து கழிக்கப்படுதல் வேண்டும்.

இறுதியில் பொறுப்புக்களின் கூட்டுத்தொகை சொத்துக்களின் கூட்டுத்தொகைக்கு சமனாகுதல் வேண்டுமா?

அவ்வாறு ஆக வேண்டும். கணக்குப் பதிவில் தவறு இருப்பின் இந்த இடத்தில் கண்டறிய முடியும்.



இவ்வாறு கணக்குக் குறிப்புகளைத் தயாரித்தல் அவ்வளவு கஷ்டமானதொரு விடயமல்ல!

சிறிய அளவிலானதொரு தொழிலை நடத்துகின்ற ஒருவருக்கு இந்த வேலையை தாமாகவே செய்ய முடியும். கொடுக்கல்வாங்கல் அதிகமுள்ள நடுத்தரளவிலான தொழில்முயற்சிக்கெனில் இந்த வேலைக்கு திறமையான ஒருவரின் சேவையைப் பெற்றுக்கொள்ளல் முக்கியமாகும். எவ்வாறு செய்த போதிலும் இவ்வாறு கணக்குக் குறிப்புகளை வைத்திருத்தல் எவ்வளவோ பயனுள்ளதொரு விடயமாகும்.

அந்தப் பயன்கள் என்ன?

கணக்குக் குறிப்புகளை வைத்திருப்பதன் மூலம் தமது தொழில்முயற்சிக்குக் கிடைக்கின்ற வருமானத்தைப் பற்றியும் அந்த வருமானத்தை ஈட்டுவதற்காக செய்யப்படுகின்ற செலவுகளைப் பற்றியும் நன்றாக அறிந்து வைத்திருக்க முடியும். ஏதாவது அநாவசியமான செலவு ஏற்படுமெனில் அதனை இனங்கண்டு அதனைத் தவிர்ப்பதற்கும் முடியும். அதேபோன்று, கிடைக்க வேண்டிய ஒரு வருமானம் கிடைக்கவில்லையெனில் அதனையும் இனங்காண முடியும். தொழில் மூலம் உண்மையிலேயே இலாபம் கிடைக்கின்றதா என்பதைப் பற்றியும் அறிந்துகொள்ள முடியும். வங்கிக் கடனைத் திருப்பிச் செலுத்த முடியுமா என்பதைப் பற்றியும் அறிந்துகொள்ள முடியும். வங்கியாளர்களுக்கும் இந்தக் கணக்கு மிகவும் பயனுள்ளதாகும்.

இதைப் படியுங்கள் அது பெறுமதியானது...

இவ்வாறு தொழிலுடன் தொடர்புடைய எல்லாக் கொடுக்கல்வாங்கல்களையும் மிகவும் ஒழுங்கான விதத்தில் கணக்குப் பதிவுகளை வைத்திருப்பதன் மூலம் அறிந்துகொள்ளவும், இனங்காணவும் முடியும். தவறு இருப்பின் அதனைத் திருத்திக்கொள்ள முடியும்.

# சந்தைப்படுத்தல்
# தொடர்பான பிரச்சினைகள்

எந்த விடயத்தை எவ்வாறு செய்த போதிலும் இறுதியாக உள்ள பிரச்சினை உற்பத்தி செய்பவற்றை விற்பனை செய்வதல்லவா!

சந்தைப்படுத்தல் என்பது தனியானதொரு கலை. எவ்வளவுதான் உயர்ந்த மட்டத்தில் உற்பத்தி நடவடிக்கைகளை செய்த போதிலும் அவற்றை விற்பனை செய்ய முடியாதிருப்பின் அனைத்துமே தோல்வியடையும். சந்தையை வெற்றிகொள்வதற்கெனில் சந்தைப்படுத்தல் உபாய முறைகளைப் பற்றி அறிந்திருத்தல் வேண்டும்.



அந்த உபாய முறைகள் என்ன?



முன்னர் கூறியதைப் போன்று சந்தையை, நுகர்வோரை அறிந்துகொள்ளல்தான் முதன்மையானது. பாரியளவிலான தொழிலில் இதற்கென சந்தை ஆராய்ச்சிகளைக்கூடச் செய்வார்கள். சிறியளவிலான தொழிலுக்கு சந்தையைப் பற்றி, நுகர்வோரைப் பற்றி பொதுவானதொரு புரிந்துணர்வுடன் செயலாற்ற வேண்டி நேரிடும். ஆனால் அவ்வாறு புரிந்துகொண்டிருப்பது மாத்திரம் போதுமானதாக இருக்காது.

அது ஏன்?

நுகர்வோரை வெற்றிகொள்ளல் வேண்டும். நுகர்வோரை கவர்தல் வேண்டும். அதற்காக செய்யப்பட வேண்டிய பல விடயங்கள் உள்ளன.

அவை என்ன?

முதன்மையான விடயம்தான் உற்பத்தி தொடர்பில் நுகர்வோரை கவரக்கூடிய சிறந்ததொரு வர்த்தகப் பெயரை இடுதல். "ரொயோடா", "நிசான்", "கொகாகோலா", "பெப்சி", "சோனி", "நஷனல்" போன்ற வர்த்தகப் பெயர் முழு உலகினதும்

நுகர்வோரை கவர்வதற்கான இயலுமையை பெற்றுள்ளது. இவ்வாறு சிறந்ததொரு வர்த்தகப் பெயரை இடுதல் விளம்பரத்திற்கும் இலகுவாகும்.

விளம்பரமும் சந்தைப்படுத்தலுக்கு அவசியமானதொரு விடயமா?



ஆம். நாம் விளம்பரம் செய்யாதிருந்தால் நுகர்வோர் எமது உற்பத்தியைப் பற்றி எவ்வாறு அறிந்து கொள்வார்கள்? வர்த்தக அறிவித்தல்களை கட்டாயம் வெளியிட வேண்டுமென்பதல்ல. ஆனால் தமது சந்தைக்கு பொருத்தமான மட்டத்தில் விளம்பரம் செய்தல் வேண்டும். அதற்கு மேலதிகமாக உற்பத்திப் பொதியிடல் நடவடிக்கையும் விளம்பரத்திற்கு ஏற்புடையதாகும்.

அது எவ்வாறு?

இன்று நுகர்வோர் பொதியிடலின்றி உற்பத்தி -யொன்றைக் கொள்வனவு செய்யமாட்டார்கள் என்று கூறுமளவுக்கு உள்ளனர். சிறந்ததொரு பொதியிடலைக் கண்டதும் நுகர்வோர் அது தொடர்பில் விருப்பம் கொள்வார்கள். அதன் மூலம் உற்பத்தி பற்றிய தொடர்பாடலையும் செய்ய

முடியும். பொதியிடலின் மீதுதான் உற்பத்தியுடன் தொடர்புடைய வர்த்தகப் பெயர் உள்ளிட்ட அநேகமான விபரங்கள் குறிப்பிடப்படும். அந்தத் தகவல்களில் விற்பனை விலை, உற்பத்தியின் நிறை, உற்பத்தியாளரின் அல்லது விநியோகஸ்தரின் முகவரி போன்ற விபரங்களை உட்புகுத்த முடியும். அது மட்டுமல்ல. உற்பத்தியின் பண்புகளைப் பற்றியும் குறிப்பிட முடியும்.

**அதாவது, உணவுப் பண்டமொன்றாயின் போசணைப் பதார்த்தங்கள் போன்றவற்றை?**

ஆம்.

# தொழிலைக் கொண்டு நடாத்துவதற்காக நிறைவு செய்ய வேண்டிய தேவைப்பாடுகள்

தொழிலை ஆரம்பிப்பதற்கெனில் அதனை பிரதேச சபையில் பதிவுசெய்ய வேண்டுமல்லவா?

பிரதேச சபையிலல்ல, பிரதேச செயலகத்தில். ஆனால், தனியாள் அல்லது பங்குடமை தொழில்முயற்சியை பதிவுசெய்வதாயிருப்பின் அதனை வியாபாரப் பெயர் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழேயே செய்தல் வேண்டும். வரையறுக்கப்பட்ட பொறுப்புகளைக் கொண்ட தனியார் கம்பனியொன்றைப் பதிவு செய்வதாயின் அதனை 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்கக் கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் கம்பனிகள் பதிவாளர் நாயகத் திணைக்கத்திலேயே பதிவு செய்தல் வேண்டும்.




பிரதேச சபைகளிலிருந்தும் உரிமப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ள முடியுமல்லவா?

பிரதேச சபை, நகர சபை, மாநகர சபை – அதாவது உள்ளூராட்சி நிறுவனங்களிலிருந்து சில தொழில்முயற்சிகளைச் செய்வதற்கான உரிமப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும். அந்த நிறுவனங்கள் வரி அறவிடுதலையும், வரிப்பணம் அறவிடுதலையும் மேற்கொள்கின்றன. அவற்றுக்கு மேலதிகமாக சுற்றாடல் உரிமப்பத்திரங்களை வழங்குவதற்கு, சுகாதாரப் பாதுகாப்பு உரிமப்பத்திரங்களை வழங்குவதற்கு, குப்பை கூழங்களை அகற்றுதலுக்கு ஏற்புடையதான வேலைத் திட்டங்களுடன் தொடர்புடைய நடவடிக்கைகளைப் பற்றி ஆராய்வதற்கு அந்த நிறுவனங்களுக்கு முடியுமாயுள்ளது. பிரதேச செயலகத்தில் அல்லது கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தில் பதிவு செய்யாது அல்லது உள்ளூராட்சி நிறுவனமொன்றிலிருந்து உரிமப்பத்திரம் அல்லது அனுமதி பெறாது தொழில்முயற்சியொன்றை ஆரம்பித்தல் சட்ட விரோதமாகும்.

அவ்வாறென்றால் மத்திய சுற்றாடல் அதிகாரசபையிலிருந்து பெற வேண்டிய உரிமப்பத்திரம்?

சுற்றாடல் பாதுகாப்பு உரிமப்பத்திரம் பெறுதலுடன் தொடர்புடைய ஏற்பாடுகள் 2008 சனவரி மாதம் 25 ஆம் திகதி வெளியிடப்பட்ட 1533/16 ஆம் இலக்க



வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலிலேயே குறிப்பிடப்பட்டுள்ளன. அந்த அறிவித்தலில், உள்ளூராட்சி நிறுவனங்களிலிருந்து சுற்றாடல் உரிமப்பத்திரம் பெற்றுக்கொள்ளக் கூடிய சிறியளவிலான 25 தொழில்முயற்சிகளின் பட்டியலொன்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக பாரியளவிலான 80 தொழில்முயற்சிகளினதும் நடுத்தரளவிலான 33 தொழில்முயற்சிகளினதும் பெயர்கள் உள்ளடங்கிய இரண்டு பட்டியல்களும் உள்ளன. இரண்டு பட்டியல்களிலுமுள்ள தொழில்முயற்சிகள் தொடர்பிலான சுற்றாடல் பாதுகாப்பு உரிமப்பத்திரத்தை மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பிரதேச அலுவலகங்களிலிருந்து அல்லது மாவட்ட அலுவலகங்களிலிருந்து பெற முடியும்.

சுற்றாடல் தொடர்பில் பல்வேறு சட்டங்களும் ஒழுங்குவிதிகளும் நிறையவே இருக்கின்றது தானே?

அந்த மூன்று பட்டியல்களும் இந்தக் கைநூலின் இறுதியிலுள்ள இணைப்பொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக சுற்றாடல் மாசடையக் கூடியவாறான கழிவுநீரை விடுதல், அதிக ஒலியை ஏற்படுத்துகின்ற இயந்திர சாதனங்களை இயக்குதல், வெடிக்கச் செய்தல், வாகனப் போக்குவரத்து மற்றும் நிர்மாணிப்புகளுக்கு ஏற்புடைய வரையறைகள் - அதாவது நியம அளவீடுகள், மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் வர்த்தமானி அறிவித்தலின் மூலம் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த விபரங்களை எவ்வாறு அறிந்துகொள்வது?

மத்திய சுற்றாடல் அதிகாரசபையிலிருந்தே அறிந்துகொள்ள முடியும்.

முகவரி: மத்திய சுற்றாடல் அதிகாரசபை
இலக்கம் 104,
டென்சில்கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.

தொலைபேசி இல.: 011 - 787 7277/78/79/90
011 - 288 8999

ஒரு தொழிலை ஆரம்பிக்கின்றபோது மேலும் எதைப் பற்றி ஆராய்ந்து பார்த்தல் வேண்டும்?

மேலும் முக்கியமானதொரு விடயம்தான் வரி செலுத்துதல்.

நாம் கஷ்டப்பட்டு சம்பாதிப்பதிலிருந்து ஏன் அரசாங்கத்துக்கு வரி செலுத்த வேண்டும்?


நாம் எமது தொழிலைச் செய்வதற்காக அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற பல சேவைகளை எவ்வித விலையையும் செலுத்தாது பயன்படுத்துகிறோம். வீதிகள், பாதுகாப்பு போன்றவை எமக்கு தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கு இன்றியமையாதவையாகும். அதன் சார்பில் அரசாங்கம் பெரியதொரு செலவை ஏற்கின்றது. மற்றையது கல்வி, சுகாதாரம் போன்றவை. இந்த அனைத்தையும் செய்வதற்கு அரசாங்கத்திற்கு பணம் தேவைப்படுகின்றது. அந்தப் பணம் வரி அறவிடுவதன் மூலமே பெறப்படுகின்றது.






இந்த வசதிகளை தொழிலை மேற்கொள்பவர்கள் மாத்திரம் அனுபவிப்பதில்லையே?

அது உண்மை. அரசாங்கம் வரி அறவிடுவது தொழில்முயற்சிகளை செய்கின்றவர்களிடமிருந்து மட்டுமல்ல. அனைவரிடமிருந்தும் ஒவ்வொரு விதத்திலும் வரி அறவிடப்படுகின்றது. பெரும்பாலான மக்கள் மறைமுகமான விதத்திலேயே வரி செலுத்துகிறார்கள். பண்டங்களுக்கு பணிகளுக்கு விதிக்கப்பட்டுள்ள பெறுமதிசேர் வரி போன்ற முறைகளின் மூலம் அத்தகைய வரி வருமானம் அரசாங்கத்திற்குக் கிடைக்கின்றது. அந்த வரி அரசாங்கத்துக்கு வந்து சேர்வது தொழிலினால் மக்களுக்கு வழங்குகின்ற பண்டங்கள் மற்றும் சேவைகளைக் கொள்வனவு செய்வதன் ஊடாகவாகும்.



அவ்வாறென்றால் வருமான வரி?

ஆம். அது வியாபாரத்தின் இலாபத்தின் மீது அறவிடப்படுகின்ற வரியாகும். தொழிலின் மூலம் கிடைக்கின்ற சம்பளத்திலிருந்தும் வருமான வரியைச் செலுத்துதல் வேண்டும். இந்த அனைத்துக்கும் பொருந்துகின்றவாறு ஒவ்வொரு வரையறை விதிக்கப்பட்டுள்ளது.



இவ்வாறு வரி செலுத்தவேண்டி நேரிட்டால் வியாபாரம் வங்குரோத்தடையுமல்லவா..



அவ்வாறல்ல. உழைக்கின்ற முழு வருமானத்திற்கும் வரி செலுத்த வேண்டும் என சட்டம் விதிக்கப்படவில்லை. பல சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. மூலப்பொருட்களைக் கொள்வனவு செய்கின்றபோது, பண்டங்களை ஏற்றிச்செல்கின்றபோது, நீர் - மின்சாரக் கட்டணம் செலுத்தப்படுகின்றபோது, வரிப்பணம் போன்றவை செலுத்தப்படுகின்றபோது எவ்வாறாயினும் வரி செலுத்தி முடிக்கப்பட்டிருக்கும். அவ்வாறானவற்றை வருமானத்திலிருந்து கழித்துக் காட்டுவதற்கு உண்ணாட்டரசிறைச் சட்டத்தில் இடமளிக்கப்பட்டுள்ளது. ஆயுள் காப்புறுதித் தவணைத் தொகை, காலத்திற்கு காலம் வழங்கப்படுகின்ற வரிச் சலுகைகள் போன்றவற்றையும் கழித்துக்கொள்ள முடியும். ஆதலால் வரி செலுத்துவதன் மூலம் வியாபாரம் வங்குரோத்தடைவதில்லை.



சிலநேரங்களில் உங்களின் வரிகளைச் செலுத்துவதற்கு நீங்கள் விரும்புவதில்லை ஏனெனில் அது மிகவும் சிக்கலான செயற்சிரமங்களைக் கொண்டிருக்கின்றன.....

சிறியளவிலானதொரு தொழில்முயற்சியில் வரியைக் கணிப்பீடு செய்தல் அவ்வளவு கஷ்டமானதொரு காரியமல்ல. நடுத்தரளவிலானதொரு தொழிலுக்கு அது பற்றிய அறிவுள்ள கணக்காளர்களின் சேவையைப் பெற்றுக்கொள்ள முடியும். நாடு முழுவதிலும் வரி ஆலோசனைச் சேவைகளை அதைப் பற்றிய அறிவுள்ளவர்கள் கொண்டு நடாத்துகின்றார்கள். எவ்வாறாயினும் வரி செலுத்தாதிருத்தல் தவறொன்றாகும். பின்னர் ஒரு காலத்தில் அபராதத் தொகையையும் சேர்த்துச் செலுத்த நேரிடலாம். அவ்வாறு ஏற்பட்டால் அது தொழில்முயற்சியின் இருப்பிலும் தாக்கத்தை ஏற்படுத்தலாம்.





இதைப் பற்றிய விபரங்களை
உண்ணாட்டரசிறைத்
திணைக்களத்திலிருந்து
பெற்றுக்கொள்ள
முடியுமல்லவா?

ஆம்.
உண்ணாட்டரசிறைத்
திணைக்கள்த்திற்கு அல்லது அதன்
கிளை அலுவலகமொன்றுக்குச் சென்று,
அவ்வாறின்றேல் அத்திணைக்களத்திற்கு
எழுதி, தொலைபேசியின் மூலம் கதைத்து
விபரங்களை அறிந்துகொள்ள முடியும்.
உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தின்
இணையத் தளத்தில் ஏற்புடைய விபரங்கள்
அனைத்தும் வெளியிடப்பட்டுள்ளன.

முகவரி: உண்ணாட்டரசிறைத் திணைக்களம்,
இலக்கம் 81,
சேர் சித்தம்பலம் ஏ காடினர் மாவத்தை,
கொழும்பு 2

தொலைபேசி: 011 - 213 5135

இணையத் தளம்: www.ird.gov.lk

பதிவு செய்வதற்கான கட்டணம், உரிமப்பத்திரக் கட்டணம், வரி போன்றவற்றுக்கு மேலதிகமாக மேலும் செலுத்த வேண்டியவை உள்ளனவா?

பதிவுக் கட்டணத்தை செலுத்தவேண்டி வருவது தொழில்முயற்சியை ஆரம்பிக்கின்றபோது. உரிமப்பத்திரக் கட்டணம் தொழில்முயற்சியை ஆரம்பிக்கின்றபோது செலுத்த வேண்டியும் வரலாம். ஆண்டுதோறும் செலுத்த வேண்டியும் வரலாம். வரி செலுத்துவதை வருடாந்தம் அல்லது மாதாந்தம் செலுத்த வேண்டி வரலாம். மேலும் செலுத்த வேண்டியதொன்றுதான், ஊழியர்களுக்கு சம்பளம் செலுத்துகின்றபோது மாதாந்தம் செலுத்த வேண்டி நேரிடுகின்ற ஊழியர் சேம நிதியத்தின் பங்களிப்புத் தொகை.

ஊழியர்களுக்குச் சம்பளம் செலுத்துவதற்கு மேலதிகமாக இவ்வாறானவற்றை செலுத்துமாறு கூறுவது ஏன்?

உண்மையிலேயே கூறுவதாயின் இது ஊழியருடைய சம்பளத்துடன் தொடர்புடைய ஒரு கொடுப்பனவாகும். ஊழியருக்கு செலுத்துகின்ற கொடுப்பனவில் ஒரு பகுதி சம்பளம் என்ற விதத்தில் குறித்த மாதத்தில் செலுத்தப்படும். அவ்வாறு செலுத்தப்படுகின்ற சம்பளத்தில் 20 சதவீதத்திற்கு சமமானதொரு தொகை ஊழியர் சேம நிதியத்துக்கு அனுப்பப்படுகின்றது. செலுத்துகின்ற சம்பளத்தில் 12 சதவீதத்துக்கு சமமானதொரு

தொகை தொழில் வழங்குனராலேயே அதாவது தொழிலதிபராலேயே செலுத்தப்படுகின்றது. மீதி 8 சதவீதத்தையும். ஊழியருக்கு செலுத்தப்படுகின்ற மாதாந்தச் சம்பளத்திலிருந்து கழித்து ஊழியர் சேம நிதியத்துக்கு அனுப்புதல் வேண்டும்.

**இந்தப் பங்களிப்புத் தொகையை நிரந்தர ஊழியர்கள் சார்பில் மட்டும்தானே அனுப்புதல் வேண்டும்?**



எல்லா ஊழியர்கள் சார்பிலும் இந்தப் பங்களிப்புத் தொகை அனுப்பப்படுதல் வேண்டும். நிரந்தர, தற்காலிக, ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட, பயிற்சி பெறுகின்ற, தவணை முறையில் வேலை செய்கின்ற என்ற வித்தியாசம் கிடையாது. இது ஊழியர்களின் சம்பளத்திற்கு மேலதிகமானதொன்று எனச் சிந்திக்கக்கூடாது. சம்பளத்தைத் தீர்மானிக்கின்றபோதே தொழில்வழங்குனரால் செலுத்த வேண்டிய 12 சதவீதத்தையும் உள்ளடக்கி கணிப்பிட்டால் சரி. இது ஒரு மேலதிகச் செலவல்ல.



அந்தப் பங்களிப்புத் தொகையை ஊழியர் சேம நிதியத்துக்கு அனுப்பாதிருந்தால்?

அது தொழில்முயற்சிக்குச் சொந்தமான பணமல்ல. 12 சதவீதம் என்பது ஊழியர் சார்பில் செலுத்துவதற்கு ஒதுக்கப்பட்டிருந்த தொகையாகும். 8 சதவீதம் என்பது ஊழியருக்கு செலுத்திய சம்பளத்திலிருந்து கழிக்கப்பட்ட தொகையாகும். அந்த இரண்டுமே ஊழியருக்குச் சொந்தமானதாகும். அவ்வாறு ஊழியருக்குச் சொந்தமான பணத்தொகையை அனுப்பாது இருப்பதென்பது மோசடியொன்றாகும்.

**இந்தப் பங்களிப்புத் தொகையை மத்திய வங்கிக்குத்தானே அனுப்ப வேண்டும்?**

பங்களிப்புத் தொகைகள் மாதாந்தம் இலங்கை மத்திய வங்கியின் ஊழியர் சேம நிதியக் கண்காணிப்பாளருக்கு அனுப்பப்படுதல் வேண்டும். இதற்காகப் பதிவு செய்தலும், கடித ஆவணங்களைப் பெற வேண்டியதும் தொழில் திணைக்களத்திலிருந்தாகும். ஊழியர் சேம நிதியத்துடன் தொடர்புடைய ஆவணங்கள் தொழில் திணைக்களத்தின் மூலம் முகாமைத்துவம் செய்யப்படுவதே அதற்கான காரணமாகும். இலங்கை

மத்திய வங்கியின் சேம நிதியத் திணைக்களம் நிதியத்தின் நிர்வாகத்தையே மேற்கொள்கின்றது. ஆதலால் இந்த இரண்டு நிறுவனங்களுடனும் தொடர்புகளைப் பேணிவருவதற்கு தொழில்முயற்சியாளர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

**இவர்களின் முகவரி, தொலைபேசி இலக்கங்கள் ...**

இலங்கை மத்திய வங்கியின் சேம நிதியத் திணைக்களம்

முகவரி: கண்காணிப்பாளர்
ஊழியர் சேம நிதியத் திணைக்களம்
13, சேர் பாரொன் ஜயதிலக்க மாவத்தை
கொழும்பு 1

தொலைபேசி: 011-220 6642,011-220 6690/91/92/ 93

மின்னஞ்சல்: epfhelpdesk@cbsl.lk
இணையத் தளம்: www.epf.lk



தொழில் திணைக்களத்தின்?

முகவரி: ஊழியர் சேம நிதியம்
தொழில் திணைக்களம்
தொழில் செயலகம்
நாராஹேன்பிட்டி
கொழும்பு 5

தொலைபேசி: 011-236 8917, 011-236 9216,
011-236 8904



## ETF என்பது என்ன?

ETF என்பது ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியமாகும். 10 ஊழியர்களுக்குக் குறைவாகவுள்ள தர்ம நிலையங்கள், குடும்ப அங்கத்தவர்களால் கொண்டு நடாத்தப்படுகின்ற நிறுவனங்களுக்கு ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு ஏற்புடையதல்ல. எனினும் ஊழியர் எண்ணிக்கையை கருத்திற்கொள்ளாது தனியார் துறையின் அனைத்து நிறுவனங்களும் இந்த நிதியத்திற்கு தமது ஊழியர்கள் சார்பில் பங்களிப்புத் தொகையைச் செலுத்துதல் வேண்டும். அது, குறித்த ஊழியரின் மாதச் சம்பளத்தில் 3 சதவீதத்திற்கு சமமானதொரு தொகையாகும்.

முகவரி: ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்
தொழில் செயலகம்
நாராஹேன்பிட்டி
கொழும்பு 5

தொலைபேசி: 011-258 1704, 011-250 3941,
011-250 3943

இணையத் தளம்: www.etfb.lk

**அவ்வாறென்றால் நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபையின் மூலம் நடைபெறுவது என்ன?**

இந்த நிறுவனம் முக்கியமாக நுகர்வோரை பாதுகாப்பதற்காகவே தாபிக்கப்பட்டுள்ளது. பண்டங்களின் விலையைக் காட்சிப்படுத்தல், பண்டங்களின் உற்பத்தி, களஞ்சியப்படுத்தல், போக்குவரத்து ஆகியன ஏற்புடைய ஒழுங்குவிதிகளுக்கிணங்க நடைபெறுகின்றதா என்பதை ஆராய்தல் இந்த அதிகாரசபையின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. அந்த ஒழுங்குவிதிகளுக்கு முரணாக செயலாற்றுகின்ற வியாபாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபைக்கு முடியுமாயுள்ளது. அதற்கு மேலதிகமாக பண்டங்கள் மற்றும் சேவைகளை வழங்குகின்ற நிறுவனங்களுக்கு மத்தியில் போட்டித் தன்மையைப் பேணிவருவதைப் பற்றியும் கவனம் செலுத்துகின்றது.

**போட்டித்தன்மையை பேணிவருவதைப் பற்றி..?**

ஆம். போட்டித்தன்மை இன்றேல் தனியுரிமை கட்டியெழுப்பப்படலாம். அது நுகர்வோருக்கு நல்லதல்ல. உற்பத்திகளின் தரம் முன்னேற்றமடைவதும் இல்லை. நிறுவனங்களுக்கு மத்தியில் போட்டி காணப்படுகின்றபோது உற்பத்தித் தரம் அதிகரித்து, விலைமட்டம் கூட குறைவடையலாம். எனவே நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை அது பற்றியும் ஆராய்கின்றது.

**இந்த நிறுவனங்கள் நுகர்வோருக்கு மாத்திரம் ஏற்புடையவை இல்லையா?**

அவ்வாறு சொல்ல முடியாது. போட்டிக்கு எதிரான நடத்தைகளுக்கு எதிராக வியாபாரிகளையும் உற்பத்தியாளர்களையும் பாதுகாத்து சிறந்ததொரு போட்டித்தன்மையை மேம்படுத்தல் இந்த நிறுவனத்தின் இலக்குகளில் ஒன்றாகும். ஆதலால் போட்டிக்கெதிரான செயற்பாடுகளிலிருந்து தமது தொழிலைப் பாதுகாப்பதற்குத் தேவையான ஒத்துழைப்பை இந்த நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொள்வதற்கு தொழில்முயற்சியாளர்களுக்கு இயலுமாயுள்ளது.

இந்தத் தகவல்களைப் பெற்றுக்கொள்வது எவ்வாறு?


நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபையிலிருந்து அறிந்துகொள்ளலாம்.

முகவரி: நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை
1வது மற்றும் 2வது மாடி
சதொச செயலகக் கட்டடம்
இல. 27, வொக்ஷோல் வீதி
கொழும்பு 2

தொலைபேசி: 011-7755 456/7

உடனடி அழைப்புக்கு: 1977





# வியாபார மதியுரை

## நிறுவனங்கள்

ஒரு தொழில்முயற்சியை மேற்கொள்கின்றபோது எதிர்கொள்ள நேரிடுகின்ற பிரதானமானதொரு பிரச்சினைதான் அதற்குத் தேவையான தொழில்நுட்ப அறிவு காணப்படாமை.....

அவ்வாறான பிரச்சினைகள் ஏற்படலாம். எனினும் அவ்வாறென்று கூறி செயலாற்றாதிருக்க, பின்னடைவுக்குள்ளாக அவசியமில்லை. அது சார்பில் உதவிகளைப் பெற்றுக்கொள்ளக் கூடிய எவ்வளவோ நிறுவனங்களுள்ளன.

அவை என்ன?

இலங்கையில் அநேகமான இடங்களில் தொழில்நுட்பக் கல்லூரிகள் அமைந்துள்ளன. இந்த நிறுவனங்களில் பல்வேறு பாடநெறிகள் நடத்தப்படுகின்றன. நிபுணத்துவ அறிவு உள்ளவர்கள் இருக்கின்றார்கள். அத்தகைய தொழில்நுட்பக் கல்லூரிகளில் தேவைப்படுகின்ற இயந்திரசாலைகள் கூட நிறுவப்பட்டுள்ளன. அந்த இடங்களில் கூட தேவையான பயிற்சியைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இது பற்றிய விபரங்களை எங்கிருந்து அறிந்துகொள்ளலாம்?

அந்தந்த தொழில்நுட்பக் கல்லூரிகளிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். கொழும்பு ஓல்கொட் மாவத்தையில் டெக்னிகல் சந்திக்கு பக்கத்தில் உள்ள தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்திலிருந்து பெற்றுக்கொள்ளவும் முடியும்.



முகவரி: தொழில்நுட்பக் கல்வி மற்றும்
பயிற்சித் திணைக்களம்
தபால் பெட்டி 557
ஓல்கொட் மாவத்தை
கொழும்பு 11

தொலைபேசி: 011-234 8897

இணையத்தளம்: www.techedu.gov.lk



அது தொழில்நுட்ப ஆலோசனையல்லவா. தொழில்முயற்சியை ஆரம்பிக்கத் தேவையான அடிப்படை ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்கெனில்?

அதற்கான ஆலோசனைகளை நாராஹேன்பிட்டியில் அமைந்துள்ள "நிபுணதா பியச" (திறன் மனை) நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியும். பொருத்தமானதொரு தொழில்முயற்சியைத் தெரிவுசெய்தல் தொடக்கம், அதற்குத் தேவையான அநேகமான ஆலோசனைகளை அந்த நிறுவனம் பெற்றுத்தருகின்றது. அதன் சார்பில் மதியுரை நிகழ்ச்சித்திட்டங்கள், பாடநெறிகள் நடத்தப்படுகின்றன.

**நாராஹேன்பிட்டியில் எங்கே இருக்கின்றது?**

எல்விட்டிகல மாவத்தையில்.

முகவரி: "நிபுணதா பியச"
இல. 354/2, எல்விட்டிகல மாவத்தை
கொழும்பு 5

தொலைபேசி: 011-259 7802



விவசாயத் திணைக்களத்திலிருந்தும் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள முடியுமல்லவா?

ஆம். விதைகள் மற்றும் கன்றுகளைப் பெற்றுக்கொள்ள, மண் பாதுகாப்பு பற்றிய ஆலோசனைகளப் பெறுவதற்கு, கிருமி நாசினிகள் - களைகொல்லிகள் மற்றும் உரப் பயன்பாடு பற்றிய ஆலோசனைகளைப் பெறுவதற்கு, புதிய பயிர்ச்செய்கை முறைகளைப் பற்றி அறிந்துகொள்வதற்கு அதுபோன்ற அநேகமானவற்றை விவசாயத் திணைக்களத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம். விவசாயத் திணைக்களத்துக்கு இணைந்ததாக இவ்வாறான வேலைகளுடன் தொடர்புடைய பெருந்தொகையான நிறுவனங்கள் நாடு முழுவதிலும் நிறுவப்பட்டுள்ளன.

அவை என்ன?

நிறுவனங்களின் பெயர்ப் பட்டியலொன்றையே சொல்ல முடியும்.

- பூங்காப் பயிர் மேம்பாட்டு நிறுவனம்
- விவசாய விஸ்தரிப்பு மற்றும் பயிற்சிப் பிரிவு
- விவசாயிகளுக்கான பயிற்சி நிலையம்
- பண்ணை இயந்திர நிலையம்
- இளம் கமக்காரர் கழகம்
- விதைச் சான்றுப்படுத்தல் சேவை
- விவசாய தொழில்நுட்பச் சேவை

**இதைப்பற்றிய விபரங்களை அறிந்துகொள்ளக்கூடிய ஓர் இடம் இருக்கின்றதா?**

இருக்கின்றது. நேரடியாகவே விவசாயத் திணைக்களத்திலிருந்து அறிந்துகொள்ளலாம்.

முகவரி: பணிப்பாளர் நாயகம்
விவசாயத் திணைக்களம்
பேராதனை.

தொலைபேசி: 1920

இணையத் தளம்: www.agridept.lk



**விவசாயத்தொழில் உற்பத்திகளுக்கான சந்தையைப் பற்றி அறிந்துகொள்வதற்கெனில்?**

அதற்கு இருக்கின்ற மிகச் சிறந்த இடம்தான் கொழும்பிலுள்ள ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம். இந்த நிறுவனத்திலிருந்து விவசாயத்தொழிலுடன் தொடர்புடைய ஆராய்ச்சி அறிக்கைகள், சந்தைப் பகுப்பாய்வுகள் மற்றும் தரவுகள் போன்றவற்றை பெற்றுக்கொள்ள முடியும்.

அது எங்கே இருக்கிறது?

கொழும்பு விஜேராம மாவத்தையில்


முகவரி: ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய
ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்
இல. 114, விஜேராம மாவத்தை
கொழும்பு 7

தொலைபேசி: 011-269 2423

இணையத் தளம்: www.harti.gov.lk

**சிறு ஏற்றுமதிப் பயிர்கள் பற்றிய ஆலோசனைகளைப் பெறுவதற்கு தனியானதொரு நிறுவனம் உள்ளதல்லவா?**

ஆம். சிறு ஏற்றுமதிப் பயிர்கள் மேம்பாட்டுக்கென தனியொரு அமைச்சே நிறுவப்பட்டுள்ளது. அந்த அமைச்சினால் நடத்தப்படுகின்ற பயிற்சி அமர்வுகள், மதியுரைச் சேவைகளில் பங்குபற்றித் தேவையான அறிவைப் பெற்றுக்கொள்ளலாம்.



முகவரி: சிறு ஏற்றுமதிப் பயிர்கள்
மேம்பாட்டு அமைச்சு
"கொவிஜன மந்திரய"
80/5, ரஜமல்வத்த உயன
பத்தரமுல்லை

தொலைபேசி: 011-288 6505

இணையத்தளம்: www.mcropmin.lk

**கால்நடை வளர்ப்பு போன்றதொரு தொழில்முயற்சியைச் செய்வதாயின்?**



அவ்வாறென்றால் அது பற்றிய ஆலோசனைகளை கன்னொருவயில் அமைந்துள்ள கால்நடை உற்பத்திகள் மற்றும் சுகாதாரத் திணைக்களத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியும். விலங்குப் பண்ணைகளை பதிவு செய்தல், விலங்கு உணவு உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தலை பதிவு செய்தல், விலங்கு மருந்துகளை பதிவு செய்தல், ஏற்றுமதி மற்றும் இறக்குமதி நடவடிக்கைகள் பற்றிய ஆலோசனைகளை இந்தத் திணைக்களத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.



## இந்தத் தகவல்களைப் பெறுவதற்கு கன்னொறுவைக்குச் செல்ல வேண்டுமா?

இந்தத் திணைக்களத்திற்குச் சொந்தமான மாகாண அலுவலகங்களிலும் இச்சேவை வழங்கப்படுகிறது. பேராதனையிலுள்ள பிரதான அலுவலகத்திற்கு எழுதி, கதைத்துக்கூட விபரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

முகவரி: கால்நடை உற்பத்திகள் மற்றும்
சுகாதாரத் திணைக்களம்
இல. 1020, கெட்டம்பே
பேராதனை

தொலைபேசி: 081-238 8462.

இணையத்தளம்: www.daph.gov.lk

## கடற்றொழில் உற்பத்திகளுடன் தொடர்புடைய ஒரு அலுவலைச் செய்வதாயின்..

அவ்வாறென்றால் அது பற்றிய விபரங்களை கடற்றொழில் மற்றும் நீரக மூலவளங்கள் அபிவிருத்தி அமைச்சிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும். மீனவ சமூகங்களின் பாதுகாப்பு மற்றும் நலனோம்புகை, மீன்பிடிக்கு பிந்திய சேதங்களைக் குறைத்தல் - அதேபோன்று கடற்றொழில் உற்பத்திகளின் தரத்தை நிர்வகித்தல் மற்றும் பாதுகாப்பை

மேம்படுத்தல், கடற்றொழில் செயற்பாடுகளைத் திட்டமிடல் மற்றும் மேற்பார்வை செய்தல், மக்களின் போசாக்கு நிலைமை மற்றும் உணவுப் பாதுகாப்பை மேம்படுத்தல், மீனவ சமூக அபிவிருத்தி போன்ற பல அலுவல்கள் இந்த அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. இந்த அமைச்சிலிருந்து அத்தகைய அனைத்து விபரங்களையும் அறிந்துகொள்ள முடியும்.




அந்த அமைச்சு எங்கே இருக்கின்றது?

கொழும்பு மாளிகாவத்தையில்.

முகவரி: கடற்றொழில் மற்றும் நீரக
வளமூலங்கள்
அபிவிருத்தி அமைச்சு
புதிய செயலகம்
மாளிகாவத்தை
கொழும்பு 10

தொலைபேசி: 011-244 6183 - 4

இணையத்தளம்: www.fisheries.gov.lk




கைப்பணிக் கைத்தொழில்களில் ஈடுபடுகின்றவர்களுக்கும் ஆலோசனை பெறுவதற்கான இடங்கள் உள்ளதா?

ஆம். அதற்கான ஆலோசனைகளைப் பெறக்கூடிய பல இடங்கள் காணப்படுகின்றன. கைத்தொழில் அபிவிருத்திச் சபை, தேசிய அருங்கலைகள் சபை, தேசிய வடிவமைப்பு நிலையம், பனை அபிவிருத்திச் சபை போன்ற நிறுவனங்களிலிருந்து இவ்வாறான வேலைகளுக்குத் தேவையான ஆலோசனைகள், விபரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

அத்தகைய இடங்களுடன் தொடர்புகொள்கின்ற விதத்தை அறிந்திருப்பதும் பயனுள்ளதாகும்


அந்த அனைத்து நிறுவனங்களினதும் முகவரி மற்றும் தொலைபேசி இலக்கங்களை கூற முடியும்.

கைத்தொழில் அபிவிருத்திச் சபை
615, காலி வீதி
கட்டுபெத்த,
மொரட்டுவை



தொலைபேசி: 011-260 5323, 260 5326-7,
011-260 5394

இணையத்தளம்: www.idb.gov.lk



தேசிய அருங்கலைகள் சபை
"ஜனகலா" மத்திய நிலைய வளாகம்
பெலவத்தை
பத்தரமுல்லை

தொலைபேசி: 011-278 5381
மின்னஞ்சல் முகவரி: craftscouncil@sltnet.lk

தேசிய வடிவமைப்பு நிலையம்
இல. 10, டி மெல் வீதி
கட்டுபெத்த
மொரட்டுவை

தொலைபேசி: 011-260 7814
மின்னஞ்சல்: slndcrisep@yahoo.com

பனை அபிவிருத்திச் சபை
244, காலி வீதி
கொழும்பு 4

தொலைபேசி: 011-258 6820
மின்னஞ்சல்: info@katpahachcholai.com
இணையத்தளம்: www.katpahachcholai.com

பனை வளர்வது கொழும்பில் அல்லவே. வடக்கில் உள்ளவர்கள் இந்த வேலைகளுக்கு கொழும்புக்கு வர வேண்டுமா?



அவ்வாறு வர வேண்டிய அவசியமில்லை. யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, கல்முனை, கற்பிட்டி, வீரவில, குருணாகல் போன்ற நகரங்களில் இந்த நிறுவனத்திற்குரிய அலுவலகங்கள் அமைந்துள்ளன. இந்த நிறுவனத்தின் இணையத்தளத்திலிருந்து அல்லது கொழும்பு அலுவலகத்திற்கு தொலைபேசி அழைப்பை எடுத்து அந்த இடங்களின் விபரங்களை அறிந்துகொள்ள முடியும்.

கலை, கலாசார அலுவல்களுடன் தொடர்புடைய ஒரு தொழிலைச் செய்வதாயின்?

அத்தகையதொரு தொழில்முயற்சியை செய்வதாயிருந்தால் அதற்குரிய ஆலோசனைகளை, ஒத்துழைப்பை கலாசார அலுவல்கள் அமைச்சிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும். அந்த அமைச்சு பத்தரமுல்லை செத்சிறிபாயவில் அமைந்துள்ளது.

முகவரி: கலாசார அலுவல்கள் அமைச்சு
8வது மாடி
செத்சிறிபாய
பத்தரமுல்லை

தொலைபேசி: 011-287 2001, 287 6586
இணையத்தளம்: www.cultural.gov.lk

**நாடு முழுவதிலுமுள்ள கலாசார நிலையங்களிலிருந்து இந்த விபரங்களைப் பெறுவதற்கு முடியாதா?**

முடியும். அந்த எல்லா நிறுவனங்களினதும் விபரம் அமைச்சின் இணையத்தளத்தில் இருக்கின்றது. அமைச்சுக்கு தொலைபேசியில் கதைத்தும் விபரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**சிறு கைத்தொழில்களில் ஈடுபடுகின்றவர்களுக்கு ஏற்றுமதி வேலைகளுடன் தொடர்புடைய அறிவு குறைவு. இதைப்பற்றிய ஆலோசனைகளைப் பெறுவதற்கான இடங்களும் உள்ளதா?**

ஆம். அதற்குரிய விபரங்களைப் பெற முடியுமான மிகச் சிறந்த இடம்தான் ஏற்றுமதி அபிவிருத்திச் சபை. அதன் தலைமை அலுவலகம் கொழும்பு நவம் மாவத்தையில் அமைந்துள்ளது.

முகவரி: இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை
இல. 42, நவம் மாவத்தை
கொழும்பு 2

தொலைபேசி: 011-230 0705 - 11
இணையத்தளம்: www.srilankabusiness.com



**இந்த நிறுவனத்திற்குரிய அலுவலகங்கள் வெளி மாகாணங்களிலும் உள்ளதா?**

ஆம். மத்திய மாகாண அலுவலகம் கண்டி, கொட்டுகொடெல்ல வீதியில் அமைந்துள்ளது. தென் மாகாண அலுவலகம் காலி, ஸ்ரீ தேவமித்த மாவத்தையில் அமைந்துள்ளது. அம்பாந்தோட்டையிலும் ஓர் அலுவலகம் உள்ளது. அது, சிறிபோபுரவில் உள்ள மாகம் ருஹுனுபுர நிர்வாகத் தொகுதியில் அமைந்துள்ளது. வடமேல் மாகாண அலுவலகம் குருணாகல், வலது சுற்றுவட்டப் பாதையில் அமைந்துள்ளது. கிழக்கு மாகாண அலுவலகம் அம்பாறை மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ளது. ஊவா மாகாண அலுவலகம் பதுளை மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ளது. மன்னாரில் மாவட்ட அலுவலகமொன்றும் உள்ளது. மன்னார் மாவட்ட செயலகத்தில் அது அமைந்துள்ளது. இந்த இடங்களைப் பற்றிய மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

## வங்கிக் கடன்



இந்த எதைச் செய்த போதிலும் வங்கிக் கடனைப் பெறுவதல்லவா சிரமமானது.

அது அவ்வளவு சிரமமானதல்ல. சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகளுக்கு வங்கியிலிருந்து கடன் வழங்கப்படுகின்றது. அவற்றுக்காகவே நடைமுறைப்படுத்தப்படுகின்ற கடன் திட்டங்களும் உள்ளன.

அவற்றுக்காகவே வழங்கப்படும் கடன்?

ஆம். இலங்கை மத்திய வங்கியால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற சௌபாக்கியா கடன் திட்டம் அவ்வாறானதாகும். இந்த கடன் திட்டம் சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகளில் ஈடுபடுகின்றவர்களுக்காகவே நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

மத்திய வங்கியாலும் கடன் வழங்கப்படுகின்றதா?



மத்திய வங்கி கடன் வழங்குவதில்லை. இந்த கடன் திட்டம் மத்திய வங்கி நிதியங்களின் மூலமே நடைமுறைப்படுத்தப்படுகின்றது. எமது கிராமப்புறங்களிலுள்ள வங்கிகளின் ஊடாகத்தான் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இது நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்படுகின்ற ஒரு கடன் திட்டமாகும். இந்தக் கடன் திட்டத்தை நடைமுறைப்படுத்தப்படுவதற்காக பதின்னான்கு வங்கிகள் இணைந்துள்ளன. அத்தகையதொரு வங்கியின் எந்தவொரு கிளைக்கும் சென்று சௌபாக்கியா கடன் தொகைக்காக விண்ணப்பிக்கலாம்.

வட்டி?

வட்டி ஆண்டுக்கு எட்டு சதவீதம். ரூபா இருபத்தைந்து மில்லியன் வரை கடன் வழங்கப்படுகின்றது.

**இருபத்தைந்து மில்லியன் என்பது இருநூற்றைம்பது இலட்சம் அல்லவா!**

ஆம். ரூபா இருநூற்றைம்பது இலட்சம் வரையான தொகையொன்றை இந்த சௌபாக்கியா கடன் திட்டத்தின் கீழ் பெற்றுக்கொள்ள முடியும்.

எவ்வாறான வேலைகளுக்கு இந்தக் கடனைப் பெற்றுக்கொள்ள முடியும்.

தமது கைத்தொழிலை விருத்தி செய்வதற்குத் தேவையான இயந்திர சாதனங்களைப் பெற்றுக்கொள்வதற்கு. ஏனைய குறைபாடுகளை நிவர்த்தி செய்துகொள்வதற்கு இந்தக் கடனைப் பெற முடியுமாயுள்ளது. ஆயினும், காணி வாங்குவதற்கு, கட்டடம் கட்டுவதற்கு இந்தக் கடன் வழங்கப்படுவதில்லை.

வர்த்தகத்திற்கு?

கடை செய்தல் போன்ற வர்த்தக நடவடிக்கைகளுக்கு இந்தக் கடன் வழங்கப்படுவதில்லை. வேறு தொழில்முயற்சிகள் பலவற்றுக்கும் கடன் வழங்கப்படுகிறது. இது பற்றிய விபரங்களை தமக்கு அண்மையிலுள்ள ஒரு வங்கியிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.



அவ்வாறென்றால் ஒரு சுயதொழிலை செய்வதெனில்?

அதற்கு - குறிப்பாக, வாழ்க்கைத் தொழிற்பயிற்சி நிறுவனங்களிலிருந்து அறிவைப் பெற்று சமூகத்தில் சேர்கின்ற இளைஞர் யுவதிகளுக்காக நடைமுறைப்படுத்தப்படுகின்ற மேலுமொரு கடன் திட்டம் உள்ளது. சுய தொழில் மேம்பாட்டுக் கடன் திட்டம் என்று அது குறிப்பிடப்படுகின்றது. இந்தக் கடன் திட்டத்திற்கான நிதியம் அரசாங்கத்திலிருந்து வழங்கப்படுகின்றது. இலங்கை மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

அவ்வாறென்றால் அந்தக் கடனைப் பெறுவது?

தமது பிரதேசத்திலுள்ள வங்கியிலிருந்து பெற முடியும். இதில் ஏழு வங்கிகள் இணைந்துள்ளன.



அதிக வட்டி அறவிடுவதில்லையாகலாம்.....

ஆம். வட்டி ஆண்டுக்கு ஒன்பது சதவீதம். ரூபா ஐந்து இலட்சம் வரை இதன் கீழ் கடன் பெறலாம். பக்கத்திலுள்ள ஒரு வங்கியிலிருந்து விபரங்களைப் பெற்றுக் கடன் தொகைக்கு விண்ணப்பிக்க முடியும்.



இந்தக் கடன் திட்டங்கள் மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்படுவதாயின், இந்த விபரங்களை மத்திய வங்கியிலிருந்தும் பெறமுடியுமல்லவா?

ஆம். இந்த இரண்டு கடன் திட்டங்கள் மட்டுமல்ல. மேலும் பல கடன் திட்டங்களை இலங்கை மத்திய வங்கி நடைமுறைப்படுத்தப்படுத்துகின்றது. இந்த இரண்டு திட்டங்களும்தான் நேரடியாகவே சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகளுடன் தொடர்புடையவை. இந்த அனைத்து கடன் திட்டங்கள் பற்றிய விபரங்களையும் இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

**மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்துடன் தொடர்புகொள்வது எவ்வாறு?**

இச்சிறு நூல் இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் மூலமே வெளியிடப்பட்டுள்ளது. நூலின் ஆரம்பத்திலேயே அனைத்து விபரங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன.

**இச்சிறு நூலின் மூலம் அவசியமான அடிப்படை விடயங்கள் அனைத்தும் விபரிக்கப்பட்டுள்ளதென நினைக்கிறேன்.**

மனிதர்களுக்கு விழிப்புணர்வூட்டாது பிரதேச அபிவிருத்தி இலக்குகளை வெற்றிகொள்ள முடியாது. எனவே மக்களை விழிப்புணர்வூட்டுகின்ற நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதும் இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் ஒரு கடமையாகும். இச்சிறு நூல் அதன் சார்பாகவே வெளியிடப்படுகின்றது.





இராஜகிரிய, சிறி ஜெயவர்த்தனபுர மாவத்தை, இல. 58இல் அமைந்துள்ள இலங்கை மத்திய வங்கி அச்சகத்தில்
அச்சிடப்பட்டு இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டது.